பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
26 06 2025 **THURSDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் 15 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருவதாக மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டில் கூறியுள்ளார்.

2. நாட்டின் எந்தவொரு மொழியுடனும் இணைந்து செயல்படும் ஆற்றலை ஹிந்தி மொழி பெற்றுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் பயிர் வாரியான விழிப்புணர்வு இயக்கத்தை மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் இன்று தொடங்கி வைத்தார்.

4. அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்பை, யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெனலன்ஸ்கி சந்தித்து, ரஷ்யா – யுக்ரைன் இடையேயான போர்நிறுத்தம் தொடர்பாக பேச்சு நடத்தினார்.

5. ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஸா போஸ்லே – அங்கிதா ரெய்னா இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>><<<<<<**

நாடுமுழுவதும் 15 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளதாக மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டேல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2028ஆம் ஆண்டுக்குள் மேலும் 4 கோடி குடும்பங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜல்ஜீவன் இயக்கத்தின் மூலம் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்ற முனைப்புடன் தமது அமைச்சகம் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளதால், வயிற்றுப் போக்கு உள்ளிட்ட உபாதைகளால் ஏற்படும் உயிரிழப்பு கணிசமாக குறைந்தள்ளதை உலக சுகாதார அமைப்பின் புள்ளிவிவரங்கள் தெரிவிப்பதாகவும் திரு. சி.ஆர். பாட்டேல் தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

நாட்டின் எந்தவொரு மொழிக்கும் ஹிந்தி எதிரானது அல்ல என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற அலுவல் மொழி துறையின் பொன்விழா கொண்டாட்டங்களில் பங்கேற்ற அவர், ஹிந்தி அனைத்து மொழிகளோடும் இணைந்து செயல்படும் வகையில் அமைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

தகவல் தொடர்புக்கு பயன்படுத்தப்படும் மொழி, நாட்டின் உயிர் நாடியாக திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் அதிகம் பேசும் மொழியில் அரசு நிர்வாகம் செயல்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

ஒவ்வொருவரும் தாம் பேசும் மொழி குறித்து பெருமை கொள்ள வேண்டும் என்றும், தங்களது தாய்மொழியில் கருத்துக்களை வெளியிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஹிந்தி மட்டுமின்றி நாட்டில் உள்ள மற்ற மொழிகளுக்கும் அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்ற நோக்கில் **JEE, NEET** மற்றும் **CUET** தேர்வுகள் 13 மொழிகளில் நடத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

அண்மையில் நடைபெற்ற மத்திய காவல்படையினருக்கான தேர்வுகளில் 95 சதவீதம் பேர் தங்களது தாய்மொழியில் தேர்வு எழுதியதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

நாட்டின் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் பயிர் வாரியான விழிப்புணர்வு இயக்கத்தை மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் இன்று தொடங்கி வைத்தார்.

மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சோயாபீன் உற்பத்தியை பெருக்குவதற்கான விழிப்புணர்வு இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

சோயாபீன் அதிக அளவில் பயிரிடும் ராஜஸ்தான், மஹாராட்டிரா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் வேளாண் அமைச்சர்கள் மற்றும் வேளாண் துறை விஞ்ஞானிகள் இதில் பங்கேற்றனர்.

இதனையொட்டி நடைபெற்ற பயிலரங்கில் தரமான சோயாபீன் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் பயிரிடப்படும் மாநிலம் வாரியான பயிர் வகைகளின் உற்பத்தியை பெருக்குவதற்கான விழிப்புணர்வு இயக்கத்தை நாடுமுழுவதும் தொடர்ந்து நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

நாட்டின் விடுதலைக்கும், தமிழ் மொழிக்கும் தமிழறிஞர் ம.பொ.சி. ஆற்றிய பணிகள் என்றும் போற்றத்தக்கது என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

அன்னாரின் பிறந்த நாளையொட்டி அமைச்சர் விடுத்துள்ள செய்தியில், ம.பொ.சி-யின் பங்களிப்புகள் என்றென்றும் போற்றத்தக்கவை என்று குறிப்பிட்டுள்ளார்.

**>>>>>><<<<<<**

ஷாங்காய் அமைப்பில் உள்ள சில நாடுகள் எல்லை தாண்டிய தீவிரவாதம் குறித்து கூட்டுப் பிரகடனத்தில் பதிவிட எதிர்ப்பு தெரிவித்த நிலையில் இந்தியா இதில் கையெழுத்திட இயலாத நிலை ஏற்பட்டதாக வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு எதிராக உள்ள ஷாங்காய் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டுப் பிரகடனத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கையெழுத்திட மறுத்ததாக குறிப்பிட்டார்.

பயங்கரவாதம் எந்த வடிவில் இருந்தாலும், அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற இந்தியாவின் கொள்கை ஷாங்காய் கூட்டுப் பிரகடனத்தில் இடம்பெறாதது துரதிருஷ்டவசமானது என்றும் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

வங்கிப் பணியாளர் தேர்வினை எழுதும் தேர்வர்கள் அடையாளத்தை சரிபார்க்க, ஆதார் எண்ணை பயன்படுத்திக் கொள்ள மத்திய நிதியமைச்சகத்தின் நிதிச்சேவைகள் துறை அனுமதி அளித்துள்ளது.

இதன்மூலம், தேர்வின் போது ஆள் மாறாட்டம் மற்றும் முறைகேடுகள் தவிர்க்கப்படும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**>>>>>><<<<<<**

இந்திய விண்வெளி வீரர் திரு சுபான்சு சுக்லா உள்ளிட்ட நான்கு விண்வெளி வீரர்கள் இன்று வெற்றிகரமாக சர்வதேச விண்வெளி நிலையத்தில் அடியெடுத்து வைத்தனர்.

விண்வெளி வீரர்கள் தங்களது வெற்றியை கொண்டாடும் வகையில், குளிர்பானம் அருந்தினர்.

நான்கு விண்வெளி வீரர்களும் பாதுகாப்பாக சர்வதேச விண்வெளி நிலையத்திற்குள் சென்றதாக குறித்து ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா நிறுவன தலைவர் டாக்டர் ஸ்ரீமதி கேசன் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் ஸ்ரீமதி கேசன் 60 செகண்ட்ஸ்)

**>>>>>><<<<<<**

அஇஅதிமுக – பிஜேபி கூட்டணியில் எந்தவொரு பிரச்சினையும் இல்லை என்று தமிழக பிஜேபி தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவை தேர்தலில், தங்களது கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

சத்திஷ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது இரண்டு பெண் நக்ஸலைட்டுகள் கொல்லப்பட்டனர்.

நாராயன்பூர் மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகளில் சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையின் போது, இந்த நக்ஸலைட்டுகள் கொல்லப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின்போது சுட்டுக்கொல்லப்பட்ட 2 பெண் நக்ஸ்லைட்டுகளிடமிருந்த துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

**>>>>>><<<<<<**

அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்பை, யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி சந்தித்து, ரஷ்யா – யுக்ரைன் இடையேயான போர்நிறுத்தம் தொடர்பாக பேச்சு நடத்தினார்.

நெதர்லாந்தின் நேட்டோ உச்சிமாநாட்டை ஒட்டி இரு தலைவர்களும் சந்தித்து போர் நிறுத்தம் குறித்து விவாதித்தனர்.

இந்த சந்திப்பு குறித்து தமது சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கி, போர் நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது குறித்தும், உண்மையான அமைதியை நிலைநாட்டுவது குறித்தும் விவாதித்ததாக தெரிவித்தார்.

அமைதியை நிலைநாட்ட அமெரிக்கா அளித்து வரும் ஆதரவுக்கு தமது நன்றியை திரு. ட்ரம்பிடம் தெரிவித்ததாகவும், அவர் கூறினார்.

**>>>>>><<<<<<**

ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே – அங்கிதா ரெய்னா இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 3-6, 6-4, 10-7 என்ற செட்கணக்கில் பெலாரஸின் **Yulia Hatouka -** போலந்தின் **Martyna Kubka** இணையை வென்றது.

**>>>>>><<<<<<**

ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் இரட்டையர் பிரிவுகளில் இந்தியா ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.

மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் அபெய் சிங் - வேலவன் செந்தில்குமார் இணை 9-11, 11-5, 11-5 என்ற செட்கணக்கில் பாகிஸ்தானின் **Zaman – Iqbal** இணையை வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் அனாகத் சிங் - ஜோஷ்னா சின்னப்பா இணை 8-11, 11-9, 12-10 என்ற செட்கணக்கில் மலேசியாவின் **Yee Xin - Ama** இணையை வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் அனாகத் சிங் - அபெய் சிங் 11-9, 11-7 என்ற செட்கணக்கில் மலேசிய இணையை வென்றது.

**>>>>>><<<<<<**

அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**>>>>>><<<<<<<**

குரேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Mudit Dani – Yeshaswini Ghorpade** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 13-11, 11-8, 11-6 என்ற செட்கணக்கில் ஸ்லோவேனியாவின் **Peter Hribar – Ana Tofant** இணையை வென்றது.

**>>>>>>END<<<<<<<**